1974 மார்ச் 6]

சென்னை நகரில் புதுவகை காய்ச்சல்

*** 294 வினு—திரு. என். கிட்டப்பா :**

திரு. என். டென்னிஸ் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை மாநகரில் 1973 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் மர்ம சுரம் பரவி வந்துள்ளா?

(இ) ஆம் எனில், அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) & (இ) விவர அறிக்கை யொன்று @ மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். டென்னிஸ் : அவையின் முன் வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே இந்தக் காய்ச்சல் மூலம் யாராவது இறந்திருகிறார்களா என்பது அறிவிக்கப்படவில்லை. இந்தக் காய்ச்சல் மூலம் உயிர் இழந்திருப்பவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கிடைத்துள்ள விவரங்களிலிருந்து, ஆயிரக்கணக்கான பேர்கள் இந்தக் குறுகிய கால காய்ச்சலினுல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்தக் காய்ச்சல் டிங்குக் காய்ச்சல் அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் காய்ச்சலினுல் பாதிக்கப்பட்டவர்கள் யாரும் இறந்ததாகத் தகவல் இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : இம்மாதிரி காய்ச்சல், டிங்குக் காய்ச்சல் அதோடு இணைந்திருக்கக்கூடிய காய்ச்சல் 10 ஆண்டு காலமாக வருஷா வருஷம் ஆகஸ்டு, செப்டம்பர் திங்களில் வந்து கொண்டிருக்கிறது. இம்மாதிரி காய்ச்சல் எபிடமிக் ஃபாரத்தில் வரக்கூடிய காய்ச்சலாக இருக்கிற காரணத்தினுல், இதைப் பற்றி பரிசிலனை செய்து தடுப்பதற்கு, குறிப்பாக சென்னை நகரம் போன்ற நகரங்களில் தடுப்பதற்கு என்ன ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

@ 358–359-ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப் பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இந்தக் காய்ச்சலைத் தடுக்க வேண்டுமென்றால் காற்றையே தடுக்கவேண்டும். இந்த இன்ஃப்ளுயென்ஸா காய்ச்சல் காற்று மூலம் தொற்றிப் பரவுகிறது. டிங்குக் காய்ச்சல் கொசு மூலம் பரவுகிறது, டிங்குக் காய்ச்சல் கொசு ஒழிப்புப் பணிகள் மூலம் ஓரளவுக்குத் தடுக்கப் படுகிறது. இந்தக் காய்ச்சல் கடந்த 8 ஆண்டு 10 ஆண்டு காலமாக காற்று மூலம் பரவுகிற காய்ச்சலாக இருந்து வருகிறது. எ-இன்ஃளு யென்ஸா காய்ச்சல் காற்று மூலம் பரவுவதால் ஒரு மாநிலத்திற் குள்ளே கூட அதைக்கட்டுப்படுத்தி விட முடியாது. வேறு நாட்டில் இருந்துவரக்கூடிய காற்றின் மூலம் பரவக்கூடும். ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஆகஸ்டு, செப்டம்பர் திங்களில் இந்தத் காய்ச்சல் காற்றின் மூலம் பரவுவதாகத் தெரிகிறது. இது பற்றி மேலும் ஆராய்ச்சி செய்து உரிய வழிவகைகள் எதிர் காலத்திலே காண முடியும்.

டாக்டர் ச. மு. பழனியப்பன் : இந்தக் காய்ச்சல் குறுகிய கால காய்ச்சல் என்றும், மேலும் இந்தக் காய்ச்சல் ஆண்டு தோறும் வருகிறது என்றும் சொன்னார்கள். சென்ற ஆண்டும், அதற்கு முந்திய ஆண்டும் ஆயிரக்கணக்கான மக்கள் சென்னை போன்ற நகரங்களில் இதனால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த ஆண்டும் வராது என்பதற்கு எந்தவிதமான உத்தரவாதமும் இல்லை. இது பற்றிய ஆராய்ச்சி 4, 5 மாதங்களுக்கு முன் துவக்கப்பட்டிருக்கிறதா ? அல்லது இனிமேல் தான் துவக்க வேண்டுமா ? அதைத் துரிதமாகத் துவக்கி இந்த ஆண்டு இந்தக் காய்ச்சல் வராமல் தடுப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அங்கத்தினர் அவர்கள் ஒரு டாக்டர். காற்று மூலமாக பரவுகிற இந்தக் காய்ச்சலைத் தடுப்ப தற்கு வழிமுறைகள் உலகத்தில் எந்த இடத்திலும் கண்டு பிடித்திருப்பதாகத் தெரியவில்லை. காற்று மூலம் பரவுகிற இந்த நோயைத் தடுப்பதற்கு, நோய்த் தடுப்பு முறைகளை விரிவுபடுத் தியும், அதற்குத் தகுந்த மருந்துகளைக் கையாள்வதன் மூலமும் தான் ஏதாவது செய்ய முடியும்.

திரு. அ. தேவேந்திரன் : ஃப்ளு ஜுரம் வந்தபொழுது அது பர்மா அகதிகளால் கொண்டுவரப்பட்டது என்று சொன்னார்கள். குறிப்பாக இந்த சுரத்தை யார் கொண்டு வந்தார்கள் என்று அறிவிக்க இயலுமா ?

1974 மார்ச் 6]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஒவ்வொரு வகையான நோயும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் வருகிறபொழுது, அதற்கான காரணம் என்னவென்று ஆராய்ந்து பார்க்கப்படுகிறது. ஒரே நோய் வெவ்வேறு காலத்தில் வெவ்வேறு காரணத்தினால் பரவக்கூடும். குறிப்பிட்ட காலத்தில் மட்டும் இந்தக் காய்ச்சலினால் பாதிக்கப்படுகிற நிலைமை உண்டாகிறது. இந்த நோய் எந்த விதமான ஒரு குறிப்பிட்ட கொசு அல்லது ஈ போன்றவற்றின் மூலம் பரவுவதாகத் தெரிவிக்கப்படவில்லை. தண்ணீர் மூலம் பரவுதாகவும் தெரிவிக்கப்படவில்லை. காற்றின் மூலம் மிக நுண்ணிய கிருமிகள் ஊடுருவிப் போவதன் காரணமாக ஏற்படு கிறது. அதற்குரிய மருந்துகள் தருவதன் மூலம் ஓரளவுக்குத் தடுக்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: பேரவைத் தலைவரவர்களே, கொசு உற்பத்தியைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ஆனால் நடை முறையிலே பார்த்தால் சென்னை, கோவை போன்ற பெரிய நகரங்களில் கொசு உற்பத்தி அதிகமாகிக் கொண்டே வருகிறது. அதனால் பலவித காய்ச்சல் உண்டாகிறது; அதைத் தடுக்க முடியவில்லை. எனவே, கொசு உற்பத்தியைத் தடுக்க அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்னென்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஒரு நோயைப் பற்றி வருகிற கொசுவுக்கும், கொசு தடுப்புப் பணிக்கும் நிறைய வேற்றுமை உண்டு. மலேரியா வியாதியைப் பரப்புகின்ற கொசு ஒன்று, பைலேரியா வியாதிகளைப் பரப்புகின்ற கொசு ஒன்று, டிங்கு காய்ச்சல் கொசு இன்னொன்று. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு தன்மை உடையவை. அவைகளுக்கான தடுப்புப் பணிகளும் வேறுபட்டவை. மத்திய அரசின் ஆலோசனையைப் பெற்று நோய் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்படி மலேரியா கொசு ஒழிப்பு சென்னையில் நடைபெற்றது. அதைப்போலவே எந்தெந்த கிட்டாரங்களில் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மத்திய அரசு சொல்கிறதோ அங்கெல்லாம் அப்பணி மேற்கொள்ளப்படுகிறது.

திரு. ஆ. பாந்தாமன்: தலைவரவர்களே, இப்படிப்பட்ட காய்ச் சலைத் தடுப்பதற்கு குறிப்பாக காற்றின் தூய்மை கெடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சரவர்கள் சொன்னார்கள். காற்றின் தூய்மை கெடாமல் பார்த்துக்

கொள்ள வேண்டுமென்ற கருத்து அகில உலக அளவில் இருக்கிறது. அந்தக் கருத்தை அதிகமாக வலியுறுத்துகின்ற அமைச்சரவர்கள் விரிவான ஒரு குழு அமைத்து, காற்றின் தூய்மை கெடாமல் இருக்க ஒரு திட்டம் வகுக்கப்படுமா? அதற்கு நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, அது ஒரு பொதுவான கேள்வி. காற்றின் தூய்மை பல்வேறு காரணங்களால்,—தொழிற்சாலைகளிலிருந்து வெளியேறும் புகை, இரயில் எஞ்சின்களிலிருந்து வரும் புகை, மற்றும் நகரங்களிலே ஏற்படுகின்ற துப்புரவு குறைவினால் உண்டாகின்ற துர்நாற்றம், போக்குரத்துகளினால் எழும்புகின்ற தூசி இவைகளினால் கெடுகிறது. காற்றின் தூய்மை கெடுதலினால்தான் இந்த குறிப்பிட்ட நோய் வருகிறது என்றால், இந்த நோய் எப்போதும் இருந்து கொண்டிருக்க வேண்டும். ஆனால் அப்படியில்லை. இந்த நோய் ஒரு குறிப்பிட்ட காலத்தில் காற்றின் மூலம் பரவுகிறது என்று சொல்லப்படுகிறது. அவ்வளவுதான். பொதுவாக காற்றின் தூய்மையைக் காப்பதற்கு, சென்னை நகரில் அதிகமான கழிவுப் பொருட்களை வெளியிடாமல் இருப்பதற்கான மாற்று யோசனை கூறலாம் என்று அடிப்படையில் ஒரு குழு அதுபற்றி ஆராய இருக்கிறது.

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இந்த நோய் சாதாரணமாக ஆகஸ்ட், செப்டம்பர், அக்டோபர் ஆகிய இந்த மூன்று மாதங்களில்தான் பரவிக் கொண்டிருக்கிறது. இதற்கு விசேஷ சிகிச்சைப் பணிகள் எவையேனும் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றனவா? அல்லது வீடு வீடாகச் சென்று சிகிச்சை அளிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, புள்ளி விபரங்களைப் பார்த்து கனம் அங்கத்தினர் மயங்கிவிடக் கூடாது. இங்கே தரப்பட்டிருக்கிற விபரம் ஒரு மாதத்திற்கு 26,000 பேர். அது சென்னையில் மட்டுமுள்ள நோயாளிகளின் எண்ணிக்கை அல்ல. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருநெல்வேலி, வேறுசில பகுதிகளிலுள்ள மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை தான். ஏறத்தாழ இந்த 25,000 அல்லது 30,000 பேர்கள் ஒரு மருத்துவ மனைக்கு என்று பார்த்தால் சுமார் 30, அதுவும் ஒரு

1974 மார்ச் 6]

நாளைக்கு என்று பார்த்தால் 5 அல்லது 10 தான் வரும். ஆகவே, வீடு வீடாகச் சென்று சிகிச்சை அளிக்க முடியாது. ஆங்காங்கே உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவரவர்களே, அம்மை, காலரா போன்ற நோய்கள் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதிகமாக இருக்கின்றன. அதைப் போலவே டிங்கு சுரமும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் அதிகமாகக் காணப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: டிங்கு காய்ச்சல் சில நேரங்களில் அதிகமாகப் பரவுகிறது. ஆனால் இந்தக் கேள்வி டிங்கு காய்ச்சல் பற்றியது அல்ல. குறுகிய கால காய்ச்சல் என்ற வேறுவித காய்ச்சலைப் பற்றியது.

திரு. எம். சுரேந்திரன்: சார், காற்று மூலமாக இந்த நோய் பரவுகிறது; இதைத் தடுப்பதற்கு உலகத்திலே ஏற்பாடு இல்லை என்று அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். ஆங்காங்கே இருக்கின்ற சூழ்நிலைக்கேற்ப, அசுத்தத் தன்மைகளுக்கேற்ப காற்றின் தன்மையும் மாறுகிறது; தூய்மையும் கெடுகிறது. ஆகவே, மோசமாக இருக்கின்ற இடங்களை சுத்தமாக மாற்றினால் காற்றின் தூய்மை பாதுகாக்கப்படலாம். அதைச் செய்வதற்கு அரசு முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: காற்றின் தூய்மை. தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகின்ற புகை, தூசி, விஷ வாயுக்கள் போன்றவைகளினால் கெடுகிறது. அப்படி காற்றின் தூய்மைக் கெடுகின்ற போது அதிலே நுண்கிருமிகள் கலக்கின்றன. நுண் கிருமிகள் கலந்த தண்ணீர் உடலில் பட்டால், அந்த இடத்தில் அரிப்பு ஏற்படுவதைப்போல காற்றிலுள்ள நுண் கிருமிகள் மனித உடலில் புகுந்து இந்தவிதமான நோய்கள் ஏற்படுகின்றன. காற்றில் நுண் கிருமிகள் கலப்பதைத் தடுக்க பல பெரிய நகரங்களில் தக்க நடவடிக்கைகளை எடுக்கிறார்கள். தமிழகத்திலும் அந்தமாதிரியான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முறை பிற்காலத்தில் உருவாகலாம்.

இந்த நோய் தூய்மையான காற்றாக இருந்தாலும் பரவக்கூடும். காற்றிலுள்ள நுண் கிருமிகள் உடலில் பட்டு, அதை தடுக்கும் எதிர்ப்புச் சக்தி உடலில் ஏற்பட்டால்தான் இந்த நோய்

அடங்குகிறது. உடலில் எதிர்ப்பு சக்தி இல்லை என்றால் தூய்மையான காற்றாக இருந்தாலும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் இந்த நோய் பரவ வாய்ப்பு இருக்கிறது. எதிர்காலத்தில் இந்த நோய் தடுப்பு முறைகளைப்பற்றி மருத்துவ வல்லுநர்கள், சிறந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டு, தக்க ஆலோசனைகளைத் கூறக்கூடும்.

மேட்டுப்பாளையத்திலுள்ள தாய்-சேய் நல விடுதி

*295 வினா—**திரு. மே. சி. தூயமணி:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மேட்டுப்பாளையம் நகரத்திலுள்ள அரசினர் மருத்துவ மனையிலுள்ள தாய்-சேய் நல விடுதியை விரிவுபடுத்துவது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: திரு. பி. ராமசாமி முதலியார், திருமதி மங்குத் தாயம்மாள் ஆகிய இருவர் கொடுக்க முன்வந்துள்ள நன்கொடையைப் பயன்படுத்தி மேட்டுப்பாளையம் அரசினர் மருத்துவமனையில் ஒரு தாய்-சேய் நல விடுதி கட்ட அரசிடம் ஒரு செயற்குறிப்பு உள்ளது.

திரு. மே. சி. தூயமணி: தலைவரவர்களே, மேட்டுப்பாளையம் அரசினர் மருத்துவமனையிலுள்ள தாய்-சேய் நல விடுதி 20 ஆண்டு களுக்கு முன்னால் தனியார் ஒருவரால் கட்டப்பட்டது. இப்போது பெருகிவரும் ஜனத்தொகைக்கு ஒப்ப அந்த விடுதியிலுள்ள வசதி கள் போதாது. ஆகவே, அதை விரிவுபடுத்தி, தாய்மார்களின் தொல்லைகள் போக்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இப்போது இரண்டு மதிப் பிற்குரிய பெருமக்கள் 15,000 ரூபாய், 30,000 ரூபாய் என்ற அளவில் நன்கொடை வழங்குவதாக அறிவித்து இருக்கிறார்கள். அவர்கள் கொடுக்கும் நன்கொடையைக் கொண்டு தனித்தனி கட்டடமாகக் கட்ட வேண்டுமா, ஒரே கட்டடமாகக் கட்டவேண்டுமா என்று அவர்களிடம் கேட்கப்பட்டிருக்கிறது. அதை அவர்களே கட்டப் போகிறார்களா அல்லது அரசிடம் பணத்தைக் கொடுத்து கட்டச் சொல்லப் போகிறார்களா என்பதும் தெரியவில்லை. அவர்களிடம் இருந்து இசைவு வந்தவுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.